சாட்சிய வாக்குமூலம்
(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)
முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்
அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 09–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–4வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிங்காரவேலன் | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | பாட்டங்கன் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

<u>முதல் விசாரணை:</u>

1. நான் ஈரோடு சுலை கதவு எண்.44/1எ EBP நகரில் வசித்து வருகிறேன். மேலும் ஈரோடு வீரப்பசத்திரத்தில் உள்ள சத்தி ரோட்டில் கதவு எண்.271/173ல் அச்சக தொழில் செய்து வருகிறேன். 1 மற்றும் 2ம் எதிரிகள் எனக்கு உறவினர்கள். 3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது. மேலும் 3ம் எதிரி எனக்கு முன்பே தெரியும்.

2. கடந்த 17.06.2014 அன்று இரவு சுமார் 11.20 மணி அளவில் என் மைத்துனர் சண்முகசுந்தரம் மற்றும் அவருடைய மகன் சிவராமன் என்னுடைய அச்சகத்திற்கு வந்தார்கள். மேலும் அவர்கள், அருண்ராம் தூக்கிட்டுகொண்டதாக என்னிடம் கூறினார்கள். அதன்பின்னிட்டு நானும் என்னுடன் வந்த சண்முகசுந்தரம் மற்றும் சிவராமன் ஆகியோர் என் மைத்துனரான வாசுதேவன் வீட்டிற்கு சென்றோம். அங்கு என் மைத்துனர் மற்றும் அவருடைய மனைவி அழுதுகொண்டடிருந்தார்கள். நான் அவர்களுக்கு ஆறுதல் கூறினேன்.

3. மேலும் நான் மற்றும் என்னுடன் வந்த சண்முகசுந்தரம், சிவராமன், என் மைத்துனர் வாசுதேவன், அவருடைய மனைவி ஆகிய அனைவரும் மேல்

மாடியில் உள்ள அருண்ராம் அறைக்கு சென்றோம். அப்போது சிவராமன் தன்னுடைய கால்களால் இரட்டை கதவை எட்டி உதைத்தார் அந்த இரு இரட்டை கதவு திறந்து கொண்டது.

4. என்னுடன் வந்த மேற்கண்ட நபர்களுடன் அருண்ராம் அறைக்கு உள்ளே சென்று பார்த்த போது அருண்ராம் தார்சு மேல் சீலிங்கில் பொருத்தப்பட்டு இருந்த மின்விசிறியில் பாலிஸ்டர் வேஷ்டியால் தூக்கில் தொங்கி கொண்டிருந்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் இந்த பாலிஸ்டர் வேஷ்டி தான் என்றால் சரிதான். சிவராமன் கீழே சென்று கத்தி எடுத்து வந்தார் அப்போது நானும், சண்முகசுந்தரமும் அருண்ராம் உடலை தூக்கி பிடித்து கொண்டோம். அப்போது சிவராமன் தான் எடுத்து வந்த கத்தியால் அருண்ராம் தூக்கிக்கிட்டு தொங்கிக்கொண்டடிருந்த பாலிஸ்டர் வேஷ்டியை அறுத்தார்.

5. பின்னிட்டு அருண்ராம் உடலை எடுத்து வந்து ஹாலில் வைத்தோம். அருண்ராம் உயிரை காப்பாற்றுவதற்காக உடனே சிவராமன் ஆம்புலன்ஸ் போன் செய்து ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு மருத்துவர்கள் அருண்ராமை மருத்துவ பரிசோதனை செய்த போது அவர் இறந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதி செய்தனர். அதன் பிறகு அருண்ராம் பிரேதத்தை சவகிடங்கிற்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு அனைவரும் வீட்டிற்கு வந்துவிட்டோம்.

6. மறுநாள் காலை 6 முதல் 7 மணிக்கு சவகிடங்கிற்கு அருண்ராம் உடலை அடையாளம் காட்டுவதற்காக அனைவரும் சென்றோம். அங்கு ஈரோடு வடக்கு காவல் ஆய்வளார் இருந்தார். அப்போது வாசுதேவன் அருண்ராம் உடலை அடையாளம் காட்டினார். மேலும் காவல் ஆய்வாளர் அனைவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார். என்னை போலீசார் விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது